
DBS Foundation POSB

# தொடக்கநிலை யாளர் வழிகாட்டி

# ஜெனரேடிவ் AI



ஆதரவு பெறுவது

DIGITAL FOR LIFE
PLAY IT FORWARD

கூட்டாளர்கள்

CSA SINGAPORE
Cyber Security Agency of Singapore

# GenAIயை பாதுகாப்பாகவும் புத்திசாலித்தனமாகவும் பயன்படுத்துதல் 01



## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் ஏற்கனவே தினமும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகிறீர்கள்! கூகிளில் தகவல்களைத் தேடும்போதும், அல்லது முகத்தை அடையாளம் காணும் தொழில்நுட்பத்தின் மூலம் உங்கள் தொலைபேசியைத் திறக்கும்போதும்.

அவை எல்லாமே செயற்கை நுண்ணறிவு தான்!

## செயற்கை நுண்ணறிவு (AI) என்றால் என்ன?

மனிதர்கள் அனுபவத்தின் மூலம் கற்றுக்கொள்வதைப் போலவே, செயற்கை நுண்ணறிவும் தகவல்களிலிருந்து கற்றுக்கொள்கிறது. அது கற்கக் கற்க, மேலும் புத்திசாலியாகி, வடிவங்களைப் புரிந்துகொண்டு முடிவுகளை எடுக்கிறது.

## ஜெனரேட்டிவ் செயற்கை நுண்ணறிவை (Gen AI) சந்தியுங்கள் – உங்கள் படைப்பாற்றல் உதவியாளர்.

Gen AI என்பது ஒரு சிறப்பு வகை செயற்கை நுண்ணறிவு ஆகும் - இது இணையத்தில் ஏற்கனவே உள்ள தகவல்களை (எ.கா. கூகிள் தேடல்) கண்டறிய முடிந்தாலும், Gen AI-யின் முக்கியப் பயன்பாடு, பின்வருவன போன்ற முற்றிலும் புதிய உள்ளடக்கத்தை உருவாக்குவதே ஆகும்:

**இசை அமைத்தல்**
(எ.கா. Amper Music, AIVA)



**காணொளிகளை உருவாக்குதல்**
(எ.காSynthesia, Runway)

**எழுதுதல் மற்றும் வரைதல்**
(எ.கா Meta AI, ChatGPT)

## Gen AI யை எவ்வாறு பயன்படுத்தலாம்?

# 02

Gen AI திட்டமிடுவதற்கும், புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்வதற்கும், வேடிக்கையாகப் பொழுதைக் கழிப்பதற்கும் கூட உங்களுக்கு உதவும் ஒரு உபயோகமான நண்பனாக இருக்க முடியும்!

## இதை நீங்கள் பயன்படுத்தக்கூடிய சில எளிய வழிகள் இதோ:

### ஒரு எளிய பயணத்தைத் திட்டமிடுதல்



செல்ல வேண்டிய இடங்களைப் பற்றி ஆராய்ந்து, பயணத் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் உணவகங்களைப் பரிந்துரை செய்தல்

### ஒரு புதிய சமையல் செய்முறையை உருவாக்குதல்



உங்களுக்குப் பிடித்தமான உணவைச் செய்வதற்கு ஆரோக்கியமான வழியைப் பரிந்துரைத்தல்!

### ஒரு செய்தியை எழுதுதல்



பிறந்தநாள் வாழ்த்துச் செய்திகள், கடிதங்கள் அல்லது பகிர்வதற்கான நகைச் சுவைகளைக் கூட வரைவு செய்தல். மொழிபெயர்ப்பிற்கும் Gen AI உதவும்.

### இதோ சில பிரபலமான Gen AI கருவிகள்:

Meta AI

ChatGPT

Gemini

### நல்ல தூண்டுதல் கட்டளைகளை உருவாக்க உதவும் விரைவான குறிப்புகள் தெளிவான எளிய கேள்விகளை



- கேளுங்கள்
- குறிப்பாகக் குறிப்பிடவும் நீங்கள் மற்றொரு நபரிடம் பேசுவது போல் உங்கள் தூண்டுதல் கட்டளைகளை
- உண்டாக்குங்கள்

Gen AI மிகவும் பயனுள்ளதாக இருந்தாலும், அதிலுள்ள அபாயங்கள் குறித்து அறிந்திருப்பது அவசியம்.

## கவனிக்க வேண்டிய சில ஆபத்துகள் இதோ:




**தவறான தகவல்களும்"மாயத்தோற்றங்களும்": Gen AI சில சமயங்களில் உண்மையல்லாத தகவல்களை நம்பும்படி வழங்கக்கூடும்**

✅ முக்கியமான தகவல்களை நம்பகமான செய்திகள் அல்லது அதிகாரப்பூர்வ மூலங்களிலிருந்து சரிபார்க்கவும்.

❌ மற்றவர்களிடம் தவறான தகவல்களைப் பரப்பாதீர்கள்.



மெய்நிகர் மாற்றம் செய்யப்பட்ட புகைப்படம்

**செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட ஆழ்நிலைப் போலிகள் (deepfakes):** Gen AI ஆல் உருவாக்கப்பட்ட மிகவும் உண்மையானதாகத் தோன்றும் போலி புகைப்படங்கள் அல்லது காணொளிகள்.

✅ செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட போலிப்பதிவுகளை (deepfake) கண்டறிய இந்த அறிகுறிகளைப் பாருங்கள்:
- முகத்தின் ஓரங்களைச் சுற்றி மங்கலாக இருத்தல்
- இயற்கைக்கு மாறான கண் சிமிட்டுதல்
- பேச்சுக்குப் பொருந்தாத உதடுகள்

❌ அவை உண்மையானவை போல் தோற்றமளிக்கின்றன என்பதற்காக மட்டும் அவற்றை நம்பாதீர்கள்

## ஐப் பயன்படுத்தும்போது கூடுதல் பாதுகாப்பு குறிப்புகள்



- உங்கள் தனிப்பட்ட தகவல்களை (உதாரணமாக, தேசிய அடையாள அட்டை, கடவுச்சொல் அல்லது வங்கி விவரங்கள்) ஒருபோதும் பகிராதீர்கள்.
- அடையாளம் தெரியாத மூலங்களிலிருந்து வரும் சந்தேகத்திற்கிடமான இணைப்புகள், இணைக்கப்பட்ட கோப்புகள் ஆகியவற்றைக் கிளிக் செய்வதையும், QR குறியீடுகளை ஸ்கேன் செய்வதையும் தவிர்க்கவும். அவற்றில் நச்சுநிரல் (malware)இருக்கலாம் அல்லது அவை  தகவல் திருட்டு(phishing) வலைத்தளங்களுக்கு இட்டுச் செல்லக்கூடும்.
- நம்ப முடியாத அளவுக்கு கவர்ச்சியாகத் தோன்றும் சலுகைகள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். Gen AI மூலம் விளம்பரங்களை எளிதாக உருவாக்க முடியும். சலுகைகள் உண்மையானவையா என்பதைச் சரிபார்க்க, எப்போதும் கடையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தைப் பார்க்கவும்.

## மேல் நடவடிக்கை எடுத்துப் புகாரளிக்கவும்•


- **சந்தேகத்திற்கிடமான அழைப்புகள்:**

  SCAMSHIELD

  ஸ்கேம்ஷில்டு உதவி எண்  **1799**

- **மோசடிப் பரிவர்த்தனைகள்:** DBS 24 மணி நேர மோசடி உதவி எண்  **1800 339 6963**

## Gen AI உடன் பாதுகாப்பாக இருப்பது



**மோசடி அழைப்புகள் அல்லது செய்திகள்:**
மோசடிக்காரர்கள், உங்களுக்குத் தெரிந்த ஒருவரைப் போலப் பேசவோ, அல்லது உங்கள் பணத்தைத் திருடுவதற்காக வங்கி அல்லது அரசாங்க அதிகாரிகளைப் போல ஆள்மாறாட்டம் செய்யவோ Gen AI-ஐப் பயன்படுத்தலாம்.

**சற்று நிறுத்திச் சரிபார்க்கவும்: எதிர்பாராத** அழைப்புகள் அல்லது செய்திகளைச் சரிபார்க்க, அதிகாரப்பூர்வ உதவி எண்ணை அழைக்கவும் அல்லது நேரடியாக அதிகாரப்பூர்வ இணையதளத்தைப் பார்வையிடவும்

**அந்த அழைப்பு அல்லது செய்தியை ஆராய்ந்து** பாருங்கள்: அதுநம்பகமானதா, அல்லது அவசரமாக, பாதுகாப்பற்ற, அல்லது வழக்கத்திற்கு மாறான ஒன்றைச் செய்யும்படி உங்களைக் கேட்கிறதா?

# மன அமைதிக்காக DBS/POSB டிஜிபேங்க் பாதுகாப்பு அம்சங்களைப் பயன்படுத்துங்கள்!

**உங்களுக்குத் தெரியுமா?**

DBS/POSB டிஜிபேங்கில், பல்வேறு பாதுகாப்பு அம்சங்கள் உங்கள் விரல் நுனியில் கிடைக்கின்றன!! விழிப்புடன் இருங்கள்!

